**செய்தி வெளியீடு எண்:165** **நாள்: 13.03.2013**

<u>செய்தி வெளியீடு</u>

காஞ்சிபுரம் மாவட்டம், கூடுவாஞ்சேரியில் வசிக்கும் தனபிரியா என்ற நான்கு வயது சிறுமியை அங்குள்ள தெரு நாய் தலையிலும், கன்னத்திலும் கடித்து இழுத்துச் சென்று படுகாயம் ஏற்படுத்தியது என்ற செய்தியை அறிந்த, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உடனடியாக அந்தச் சிறுமியை சென்னை, அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதித்து அரசு செலவில் சிகிச்சை அளிக்க உத்தரவிட்டார்கள்.

காஞ்சிபுரம் மாவட்டம், கூடுவாஞ்சேரி, கோவிந்தராஜபுரம், வள்ளி நகரில் வசிக்கும் திரு. சரவணன் என்பவரின் நான்கு வயது மகள் தனபிரியா, பள்ளிக்கூடம் செல்வதற்காக நடந்து சென்று கொண்டிருந்த போது, அங்குள்ள தெரு நாய் ஒன்று அச்சிறுமியின் தலையிலும், கன்னத்திலும் கடித்து படுகாயம் ஏற்படுத்தியது. இந்தச் செய்தியை அறிந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அச்சிறுமிக்கு சிறந்த மருத்துவ சிகிச்சை அளிக்கும் வகையிலும் பிளாஸ்டிக் சர்ஜரி முறையில் முக சீரமைப்பு சிகிச்சை அளிக்கவும் சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதித்து சிகிச்சை அளித்திட உத்தரவிட்டார்கள். அத்துடன் சிறுமி தனபிரியாவிற்கு அளிக்கப்படும் இந்த சிகிச்சைக்கான அனைத்து செலவுகளையும் தமிழக அரசே ஏற்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டார்கள்.

மேலும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறைச் செயலாளர் ஆகியோர் சென்னை அப்பல்லோ மருத்துவமனைக்கு சென்று சிறுமி தனபிரியாவிற்கு ஆறுதல் கூறுமாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

அதன்படி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறைச் செயலாளர் ஆகியோர் சென்னை அப்பல்லோ மருத்துவமனைக்குச் சென்று அங்கு சிகிச்சை பெற்று வரும் சிறுமி தனபிரியாவை நேரில் சந்தித்து ஆறுதல் கூறியதோடு, சிறுமி தனபிரியாவிற்கு சிறந்த முறையில் சிகிச்சை அளித்திடுமாறு மருத்துவர்களைக் கேட்டுக்கொண்டார்கள்.

தெரு நாய்களால் ஏற்படும் இத்தகைய சம்பவங்களைத் தடுத்திடும் வகையில், நகராட்சி நிர்வாகத் துறை, புளூ கிராஸ் சங்கத்துடன் இணைந்து விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.
நாள்: 13.3.2013